போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

NOVEMBER 27, 1923.

நெ. 11 (1).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம்௵ நவம்பர்௴ 27௳. [விலை, 3 பை.

சென்னை கவர்ன்மெண்ட் மசோதா ஆக்ட்

BILL OF THE GOVERNMENT OF MADRAS

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின் ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்ட்.

சென்னை சட்டநிரூபண சபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகின்றன :—

BILL No. 6 OF 1923.

1923-ம்௵த்து 6-வது மசோதா ஆக்ட்.

A BILL TO REPEAL THE STAGE CARRIAGES ACT, 1861, IN ITS APPLICATION TO THE PRESIDENCY OF MADRAS AND AMEND THE MADRAS HACKNEY CARRIAGE ACT, 1911.

1861-ம்௵த்து தபால் வண்டிகள் ஆக்ட் சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்குப் பிரயோகப்படுகிறமட்டில் அதை ரத்து செய்வதற்கும் 1911-ம்௵த்திய சென்னபட்டணத்து கொடைக்கூலி வண்டி ஆக்டைத் திருத்துவதற்குமான மசோதா ஆக்ட்.

1861-ம்௵த்து இந்தியா 16-வது ஆக்ட். 1911-ம்௵த்திய சென்னபட்டணத்து 5-வது ஆக்ட்.

பீடிகை.

1861-ம்௵த்து தபால் வண்டிகள் ஆக்டை சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்குப் பிரயோகப்படுகிறமட்டில் ரத்துசெய்வதும் 1911-ம்௵த்திய சென்னபட்டணத்து கொடைக்கூலி வண்டி ஆக்டைத் திருத்துவதும் யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்கு கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, 1924-ம்௵த்திய சென்னபட்டணத்து தபால் வண்டிகளையும் கொடைக்கூலி வண்டியையுங்குறித்த (திருத்துவதற்கான) ஆக்ட் என்று சொல்லலாம்.

1861-ம்ஞூத்து தபால் வண்டிகள் ஆக்ட் ரத்தாவது.

2. 1861-ம்ஞூத்து தபால்வண்டிகள் ஆக்ட் சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்குப் பிரயோகப்படுகிறமட்டில் அது இதனுல் ரத்து செய்யப்படுகிறது. 1861-ம்ஞூத்து இந்தியா 16-வது ஆக்ட்.

1911-ம்ஞூத்திய சென்னபட்டணத்து 5-வது ஆக்ட் 1-வது பிரிவில் திருத்தம்.

3. (இதில் பின்னுல் ஷை ஆக்டென்று குறிப்பிடப்படும்) 1911-ம்ஞூத்திய சென்னபட்டணத்து கொடைக்கூலி வண்டி ஆக்ட் 1-வது பிரிவைச் சேர்ந்த (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"(2) அது சென்னபட்டணத்துக்கு வியாபிக்கிறது.

(3) (i) பிரதேச கவர்ன்மென்டார் - விளம்பரம் பிரசுரித்து, அந்த விளம்பரத்தின் தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குக் குறையாமல் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படும் தேதி முதல், இந்த ஆக்டின் எல்லா நிபந்தனைகளையுமாவது அவைகளில் யாதொரு நிபந்தனையையாயது ஷை விளம்பரமூலமாய் வியாபிக்கும்படிச் செய்யலாம் :

ஆனுல், (இந்த ஆக்டை) வியாபிக்கச்செய்ய உத்தேசித்திருப்பதைக்குறித்தும் அதற்குள்ள ஆட்சேபனைகளைத் தெரிவிக்கவேண்டுமென்று கண்டும் இரண்டு மாதத்துக்குக் குறையாமல் முன்னதாக நோடிஸ் பிரசித்தம செய்திருந்தாலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட விளம்பரம் எதுவும் பிரசுரிக்கக்கூடாது.

(ii) (i) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிற யாதொரு விளம்பரத்தைப் பிரதேச கவர்ன்மென்டார் விளம்பர மூலமாய் ரத்து செய்யலாம் அல்லது திருத்தலாம்."

1911-ம்ஞூத்திய சென்னபட்டணத்து 5-வது ஆக்ட் 3-வது பிரிவில் திருத்தம்.

4. ஷை ஆக்ட் 3-வது பிரிவைச் சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவை விட்டுவிட்டு, இப்போதிருக்கும் (5), (6), (7) குறிப்பிட்ட உட்பிரிவுகளுக்கு மீண்டும் இலக்கமிடவேண்டும்.

1911-ம்ஞூத்திய சென்னபட்டணத்து 5-வது ஆக்ட் 9-வது பிரிவில் திருத்தம்.

5. ஷை ஆக்ட் 9-வது பிரிவில் கண்ட வீத நிர்ணயத்துக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

	ரூ.
(a) ஆறு பயணக்காரர்களுக்கு அதிகமாய் ஏற்றிக்கொண்டுபோக லைஸென்ஸ் கொடுக்கப்பட்டு, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட குதிரைகளினுல் இழுக்கப்படும் நான்கு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கு	10
(b) இரண்டு குதிரைகளால் இழுக்கப்படும் இதர நான்குசக்கர வண்டி ஒவ்வொன்றுக்கு..	5
(c) ஒரு குதிரையினுலாகிலும் எருதுகளினுலாகிலும் இழுக்கப்படும் இதர நான்கு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கு	2
(d) ஒரு குதிரையினுல் இழுக்கப்படும் இரண்டு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கு ..	2
(e) ஒரு எருதினுலாவது பல எருதுகளினுலாவது இழுக்கப்படும் இரண்டு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கு	1
(f) ஒரு மனிதனுல் இழுக்கப்படும் அல்லது தள்ளப்படும் ரிக்ஷா, பெராம்புலேடர் அல்லது வேறே வண்டி ஒவ்வொன்றுக்கு	1

1911-ம்ஞூத்திய சென்னபட்டணத்து 5-வது ஆக்ட் 19-வது பிரிவில் திருத்தம்.

6. ஷை ஆக்ட் 19-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் 'ஒரு ரூபாயாகும்', 'நாலணுவாகும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக முறையே 'இரண்டு ரூபாயாகும்', 'ஒரு ரூபாயாகும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1911-ம்ஞூத்திய சென்னபட்டணத்து 5-வது ஆக்ட் 24-வது பிரிவில் திருத்தம்.

7. ஷை ஆக்ட் 24-வது பிரிவைச் சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவில், '9-ம் பிரிவிற் கண்ட கட்டணத்திற பாதியை' என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கத்துக்கும் பர்த்தியாக '19-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட கட்டணத்தை" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

1911-ம்ஞூத்திய சென்னபட்டணத்து 5-வது ஆக்ட் 33-வது பிரிவில் திருத்தம்.

8. ஷை ஆக்ட் 33-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில், 'இரண்டணு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'நாலணு' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1911-ம்ஞூத்திய சென்னபட்டணத்து 5-வது ஆக்ட் 43-வது பிரிவு ரத்தாவது.

9. ஷை ஆக்ட் 43-வது பிரிவை விட்டுவிடவேண்டும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

தபால் வண்டிகள் ஆக்ட் 1861-ம்௵ முதல் சென்னை ராஜதானியில் அமுலிலிருந்து வருகிறது. சில ஜில்லாக்களில் இந்த ஆக்டை அமுலுக்குக் கொண்டுவருவதில் கஷ்டங்கள் உண்டாயினவென்று அப்போதைக்கப்போது கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வண்டி ஓட்டுகிறவர்கள் விஷயமாய்த் திறமையாக எவ்விதமாகவேனும் மேல்விசாரணை புரிவதற்காகவாகிலும், சத்தங்களையும் வண்டி ஓட்டுவது சம்பந்தமான திட்டங்களையும் ஒழுங்காய் ஏற்படுத்துவதற்காகவாகிலும் ஷை ஆக்டிலாவது அதன்படி செய்யப்பட்ட விதிகளிலாவது போதுமானபடி நிபந்தனை ஏற்படுத்தப்படவில்லை. இந்தக் குறைகளை நீக்குவதற்காக, ஷை ஆக்டை அடியோடு ரத்துசெய்துவிடவேண்டு மென்றும், சென்னபட்டணத்து கொடைக்கூலி வண்டி ஆக்ட் 1-வது பிரிவைத் தக்கபடி திருத்தியும் தபால் வண்டிகள் ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளுக்கு ஏற்கனவே உட்பட்டிருந்த ரஸ்தாக்களுக்கும் கொடைக்கூலி வண்டி ஆக்ட் முழுவதையுமாவது அதன் யாதொரு பாகத்தையாவது கவர்ன்மெண்டார் வியாபிக்கச் செய்யக்கூடியவர்களாயிருப்பதற்கு அவசியமாயிருக்கும்படியான இதர திருத்தங்களைச் செய்தும் கொடைக்கூலி வண்டி ஆக்டுடன் மேலே கண்ட ஆக்டையும் சேர்த்துவிடவேண்டுமென்றும் யோசனை சொல்லப்பட்டது. மேலும், இந்த ராஜதானியில் அனேக இடங்களிலே இப்போது தபால் வண்டிகளுக்கு பர்த்தியாக மோடார் வண்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் சில இடங்களிலே ஷை தபால் வண்டிகள் நாளாவர்த்தியில் குறைந்துகொண்டே வருகின்றன. இந்த விஷயங்களை உத்தேசித்து, கவர்ன்மெண்டார் - தபால் வண்டிகள் ஆக்ட் இந்த ராஜதானிக்குப் பிரயோகப்படுகிறமட்டில் அந்த ஆக்டை ரத்து செய்துவிட்டு, ஏற்கனவே அந்த ஆக்ட் செலாவணியாய்க்கொண்டிருந்த இடங்களுக்கும் 1911-ம்௵த்திய சென்னபட்டணத்து கொடைக்கூலி வண்டி ஆக்டைத் தக்கபடி திருத்தி அந்த ஆக்டையாகிலும் அதைச் சேர்ந்த எந்த பாகங்களையாகிலும் வியாபிக்கச் செய்யும்படி நியந்தனை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள்.

2. கொடைக்கூலி வண்டி ஆக்டில் கண்ட நிபந்தனைகள் மாறுபட்ட நிலைமைகளுக்குப் பொருத்தமாக அப்போதைக்கப்போது திருத்தப்பட்டுவந்தபோதிலும், அந்த ஆக்டின்படி இப்போது விதிக்கப்பட்டுவரும் கட்டண ஜாபிதா மாத்திரம் 1879-ம்௵ முதல் அப்படியே இருந்துவருவதாகத் தெரியவந்திருக்கிறது. ஷை கொடைக்கூலி வண்டி ஆக்டை அமுலுக்குக் கொண்டுவருவதற்காகப் பிடிக்கும் செலவுகளோ பெரிதும் அதிகப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்குக் கிடைக்கும் வருமானமானது அது சம்பந்தப்பட்ட ஆக்டை அமுலுக்குக் கொண்டுவருவதற்காகப் பிடிக்கும் செலவுக்குச் சற்று ஏறக்குறைய சரியாக இருப்பது அவசியமென்று எண்ணப்படுகிறது. இந்தப்படி வருமானம் கிடைப்பதற்கு ஷை கட்டண ஜாபிதாவை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே, ஷை ஆக்டின்படி வெவ்வேறு காரியங்களுக்காக கட்டணங்கள் விதிப்பதற்குச் சம்பந்தப்பட்ட பிரிவுகளைத் திருத்த உத்தேசிக்கப்படுகிறது.

1923-ம்௵ நவம்பர்மீ 17உ. ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.